## 2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ம் நாள் புதன்கிழமை

**I.A.No.10/2026 in O.S.No.66/2023**
**(TNTL06-000092-2023)**

1) ஆனந்தராஜ்

2) தமிழ்ச்செல்வன்
3) அனுசியா
4) மரிய புஷ்பம்
5) பிலவேந்திர ராஜ்
6) ரமேஷ்
7) ஏஞ்சல் மேரி

...1 முதல் 7 மனுதார்கள்/1 முதல் 7 பிரதிவாதிகள்

/Vs/

1) மரியம்மாள்
2) ராஜ்
3) வட்டாட்சியர், மானூர் தாலுகா,
4) மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி மாவட்டம்.

...1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 1 மற்றும் 2
வாதிகள் மனுதாரர்கள் / 8 மற்றும் 9 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 14.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.D.சண்முகஜெகன் அவர்கள் முன்னிலையாகியும் 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் எதிருரை தாக்கல் இல்லை என்று தெரிவித்த நிலையிலும் இருதரப்பு

வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் பெற்று அதனை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 8 விதி 8(a)(2)மற்றும் பிரிவு 151 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) 1 வது வாதி மாதா என்ற ராஜ்மோகன் என்பவரின் மனைவியாக 2021 ல் இல்லை என்பதை காட்டுவதற்கு வாக்காளர் பட்டியல் நகல் மற்றும் 2026 ல் மேற்படி வாக்காளர் பட்டியலில் 1 வது வாதியின் பெயர் மாதா என்ற ராஜ்மோகன் உள்ளது என்பதை காட்டுவதற்கு 2026 வாக்காளர் பட்டியல் நகல் ஆகியவற்றினை மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியுள்ளது. ஆவணங்களை பதிவிறக்கம் செய்யாத காரணத்தினால் மேற்படி ஆவணங்களினை மனுதாரர்கள் பதில் உரையோடு தாக்கல் செய்ய இயலவில்லை.

2.2) எனவே மனுவோடு தாக்கல் செய்துள்ள 2021 ஆண்டிற்கான திருநெல்வேலி சட்டமன்ற தொகுதி 224, நாஞ்சான்குளம், டி டி டி ஏ நடுநிலைப்பள்ளி தெற்கு பகுதி வாக்குசாவடிக்குரிய வாக்காளர் பட்டியல் நகல் மற்றும் 2026 ஆண்டிற்கான திருநெல்வேலி சட்ட மன்ற தொகுதி 224, நாஞ்சான்குளம், டி டி டி ஏ நடுநிலைப்பள்ளி தெற்கு பகுதி வாக்குச்சாவடிக்குரிய வாக்காளர் பட்டியல் நகல் ஆகிய 2 ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளஎதிருரையின் சுருக்கம்</u>**

3.1) வாதியின் வழக்கு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தரப்பில் ஏற்கனவே சாட்சிகளாக 6ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி விசாரணை செய்யப்பட்ட நிலையில் கூறியுள்ள அதே சங்கதிகளை பொறுத்தும் வழக்கிற்கு சிறிதும் அவசியமற்ற ஆவணங்களை குறியீடு செய்வதற்காகவும் 3வது சாட்சியாக விசாரணை செய்ய நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்து மேற்படி வாக்காளர் பட்டியலினை இந்த சாட்சியை கொண்டு குறியீடு செய்ய இயலாது, மேற்படி வாக்காளர் பட்டியல் நகலினை முதன்மை ஆவணமாக ஏற்றுக்கொள்ள இயலாது. அந்த ஆவணங்களில் எவ்வித கையொப்பங்களும் இல்லை.

3.2) வாக்காளர் பட்டியல் முகவரி, உறவுமுறை குறித்து அடிப்படை மற்றும் உறுதிபடுத்தும் ஆவணம் அல்ல என்பதாலும் மேற்படி ஆவணமானது ஷை வழக்கிற்கு தேவையற்ற ஆவணம் என்பதாலும் மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி ஆவணம் குறித்து மனுதாரர்கள் எதிர்வழக்குரையிலோ 1ம் சாட்சி நிரூபணவாக்குமூலத்திலோ கூறப்படவில்லை. வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் கிடைத்துவிட கூடாது என்பதற்காகவும், எதிர்மனுதாரர்கள் வாரிசு சான்றிதழ் பெற்றுவிட்டால் குடும்ப சொத்துக்களில் பங்கு கொடுக்க வேண்டியிருக்கும் என்பதற்காகவும் இந்த வழக்கினை இழுத்தடிப்பதற்காகவும் மட்டுமே இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே எதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் மனுதாரர்கள் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

## தீர்வு

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

6) அசல் வழக்கானது காலம்சென்ற ஆண்டனி என்பவரின் வாரிசுகள் வாதி மற்றும் 1 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் என்று விளம்புகை கோரியும் அதனைதொடர்ந்து 8ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்கும் ஆவணங்கள் என்றும் எனவே மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுமென்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது 2021 மற்றும் 2026ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியல் என்பது தெரியவருகிறது. மேற்படி ஆவணங்களில் கையெழுத்துக்கள் இல்லை என்பதும் தெரியவருகிறது.

8) இருப்பினும் இம்மனுவை அனுமதிப்பதால் மட்டுமே மனுதாரர்கள் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபித்ததாக கூற முடியாது. இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரர்களையே சாரும். இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்யும் போது எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபனை எதேனும் இருப்பினும் அந்த ஆட்சேபனையை இந்நீதிமன்றம் தீர்மானிக்க முடியும் என்பதாலும் ஆவணங்களின் தொடர்புடைமை மற்றும் அனுமதிக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்ப்பின்

போது தீர்மானிக்க முடியும் என்பதாலும் எதிர்மனுதாரர் மேற்படி ஆவணங்கள் குறித்து மனுதாரர்கள் தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யலாம் என்பதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) மேலும் அசல் வழக்கானது மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு அனுமதிக்கப்பட்டால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10) முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

orders uploaded on 20.08.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.08.20 11:12:59 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிபதி, திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

orders uploaded on 20.08.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.08.20 11:13:06 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**<u>I.A.No.10/2026 in O.S.No.66/2023</u>**

**சீரான – உத்தரவு**

**<u>நாள்–09.10.2025</u>**